[1979 ஏப்ரல் 25

பாசனக் குளங்களின் கீழ் உள்ள ஆயக்கட்டுகள்

*வினா எண். 819: திரு. ஒ. சோ. வேலுச்சாமி மாண்புமிகு வேளாண்மைபாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா :—

(அ) நீர்ப்பாசன குளங்கள் புதிதாக அமைக்கப்படும் பொழுது அவைகளுக்குரிய ஆயக்கட்டு நிலங்களைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு தவணைக்கடன் முறையில் சீர்திருத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உண்டா ?

(ஆ) நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டி, ஒட்டப்பிடாரம் ஆகிய தாலுக்காக்களில் உள்ள புதிய குளங்களின் ஆயக்கட்டு நிலங்களை சீர்படுத்திக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) பாசன நிலங்களில் சீரிய நீர் மேம்பாடு நுட்ப முறைகளைக் கையாள வேண்டும் என்பதும் அதற்கேற்ப நிலங்களைத் தவணைக் கடன் முறையில் சீர் திருத்தம் செய்ய வேண்டும் என்பதும் அரசின் கொள்கையாகும். இத் திட்டம் சில ஏரிப்பாசனப் பகுதிகளில் ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட இருக்கிறது.

(ஆ) இல்லை.

பிளவக்கல் அணைக் கால்வாய்கள்

*வினா எண். 820— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி பிளவக்கல் அணையில் இருந்து தாமரைக்குளம், பாதரன்குளம், கப்பாங்குளம், சிறுக்குளம் ஆகிய கண்மாய்களுக்கு (Tank) கால்வாய் போக்குவரத்து அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தாமரைக்குளம் மட்டுமே பிளவுக்கல் அணைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

(ஆ) பிளவுக்கல் அணையிலிருந்து தாமரைக் குளத்திற்கு நீர் வழங்கும் கால்வாய் ஒன்று ரூபாய் 17,500 செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு, இத் திட்ட மதிப்பீடு தற்பொழுது ஆய்வில் உள்ளது. தாமரைக்குளம் தவிர மற்ற மூன்று குளங்களும் இந் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

1979 ஏப்ரல் 25]

(முற்பகல் 9.50)

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் நம்மைச் சரிக்கட்டுவதற்கென்று தாமரைக் குளத்திற்கு மட்டும் எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள். மீதி குளங்களுக்கும் எஸ்டிமேட் போட்டு விவசாயிகள் பயனடைகின்ற வகையில் செய்வார்களா ? அதுமட்டும் அல்லாமல் அந்தப் பகுதி யிலுள்ள வரட்சியைப் போக்குவதற்காக அழகர் அணைத்திட்டம் என்ற அந்தத திட்டத்திற்கு மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் அடிக்கல்லை மட்டும நாட்டிவிட்டுப் போய்விட்டார்கள். அது வெகு நாட்களாக பெண்டிங்கிலே இருக்கிறது. ஆகவே, அதையும் செய்து முடிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலை வரவர்களே, தாமரைக்குளத்தைத் தவிர மற்ற குளங்களான பாதரன்குளம், கப்பாங்குளம், சிறுக்குளம் ஆகியவை வில் ராயன் குளம் தொகுதியைச் சார்ந்தவை. இவைகள் எல்லாம் ஒரே குரூப்பிலே இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் சிற்றா றிலே இருந்து தண்ணீர் வருகின்றது. தாமரைக் குளம் சிற் றாற்றின் இடப்பக்கத்திலே அமைந்துள்ளது. கான்சாபுரம் கிராம மக்களின் கோரிக்கைக்கு இணங்க தாமரைக் குளம் பிள வுக்கல் அணைத் திட்டத்தில் இப்போது சேர்க்கப்பட்டுள்ளது, மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் அழகர் அணைத் திட்டத் திற்கு மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் அடிக்கல்லை மட்டும் நாட்டிவிட்டுச் சென்றதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள். பழைய அரசின் காலத் திலே அடிக்கல்லை மட்டும்தான் நாட்டினார்கள் என்ற பிரச் சினை இருந்ததே ஒழிய அவர்கள் படிக்கல்லை நாட்டவில்லை.

ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு விவசாயிகளுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையில் நல்ல பல திட்டங்களை ஏற்படுத்துவதற்காக ஆவன செய்து பல திட்டங்கள் ஆய்விலே இருந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பச்சையாறு அணைத் திட்டம்.

*வினா எண். 821—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாங்குநேரி வட்டத்தில் பச்சையாறு அணைத்திட்ட வேலை தற்போது எந்நிலையில் உள்ளது ?